**பாடம் - 1**

**தொழுகையின் சட்டங்கள்**

**الدرس الأول**

**أحكام الصلاة**

தொழுகை இஸ்லாத்தின் அடிப்படைக் கடமைகளில் இரண்டாவது கடமையாகும். இது பருவமடைந்த புத்தி சீர்நிலையிலுள்ள முஸ்லிமான ஆண், பெண் அனைவர் மீதும் கடமையாகும். அறிஞர்களின் ஏகோபித்த முடிவின்படி தொழுகை கடமை என்பதை மறுப்பவன் காபிராவான். அலட்சியமாகவும் சோம்பலின் காரணமாகவும் தொழுகையை முற்றிலும் விட்டுவிடுபவன் காபிர் ஆவான் என பெரும்பாலான நபித்தோழர்கள் கருதுகின்றனர். மறுமை நாளில் அடியானிடம் கேட்கப்படும் முதல் கேள்வி தொழுகை பற்றித்தான். அல்லாஹ் கூறுகிறான்:

﴿إِنَّ الصَّلَاةَ كَانَتْ عَلَى الْمُؤْمِنِينَ كِتَابًا مَوْقُوتًا﴾ [النساء:١٠٣]

'நிச்சயமாகத் தொழுகை நம்பிக்கை கொண்டோர் மீது நேரம் குறிக்கப்பட்ட கடமையாக உள்ளது.'(4:103)

عَنْ ابْنِ عُمَرَ رضي الله عَنْهُمَا قَالَ: قَالَ رَسُولُ اللهِ ﷺ: بُنِيَ الْإِسْلَامُ عَلَى خَمْسٍ شَهَادَةِ أَنْ لَا إِلَهَ إِلَّا اللهُ وَأَنَّ مُحَمَّدًا رَسُولُ اللهِ وَإِقَامِ الصَّلَاةِ وَإِيتَاءِ الزَّكَاةِ وَالْحَجِّ وَصَوْمِ رَمَضَانَ (خ/ ٨، م/ ١٦)

وعن جابرٍ رضي الله عنه قال: سَمِعْتُ النَّبِيَّ ﷺ يَقُولُ: إِنَّ بَيْنَ الرَّجُلِ وَبَيْنَ الشِّرْكِ وَالْكُفْرِ تَرْكَ الصَّلَاةِ (م/ ٨٢)

நபி (ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள்: இஸ்லாம் ஐந்து அடிப்படைக் கடமைகள் மீது நிறுவப்பட்டுள்ளது. அவை வணக்கத்திற்குரியவன் அல்லாஹ் வைத் தவிர வேறு யாருமில்லை என்றும் முஹம்மத் நபி (ஸல்) அவர்கள் அல்லாஹ்வின் தூதர் என்றும் உறுதியாக நம்புவது, தொழுகையை நிலை நாட்டுவது, ஜகாத் கொடுப்பது, ஹஜ் செய்வது ரமழானில் நோன்பு நோற்பது ஆகியவையாகும். அறிவிப்பவர்; இப்னு உமர்(ரலி) நூல்: புகாரி (8), முஸ்லிம்(16)

'ஒரு மனிதன் இணைவைப்பிலும் இறைநிராகரிப்பிலும் இருக்கிறான் என்பதன் அடையாளம் தொழுகையை விடுவதாகும்' எனவும் நபி (ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள். அறிவிப்வர்: ஜாபிர் (ரலி), நூல்: முஸ்லிம் (82)

மட்டுமின்றி தொழுகையை நிறைவேற்றுவதற்கு மகத்தான சிறப்புகளும் உள்ளன. இதோ அவற்றில் சில:

عَنْ أَبِي هُرَيْرَةَ رضي الله عنه قَالَ: قَالَ رَسُولُ اللهِ ﷺ: مَنْ تَطَهَّرَ فِي بَيْتِهِ ثُمَّ مَشَى إِلَى بَيْتٍ مِنْ بُيُوتِ اللهِ لِيَقْضِيَ فَرِيضَةً مِنْ فَرَائِضِ اللهِ كَانَتْ خَطْوَتَاهُ إِحْدَاهُمَا تَحُطُّ خَطِيئَةً وَالْأُخْرَى تَرْفَعُ دَرَجَةً (م/ ٦٦٦)

யார் தனது வீட்டில் உளுச் செய்து விட்டு பிறகு அல்லாஹ்வின் கடமைகளில் ஒரு கடமையை நிறைவேற்றுவதற்காக அல்லாஹ்வின் இல்லங்களில் ஏதேனும் ஒன்றை நோக்கி நடக்கிறாரோ அவர் எடுத்து வைக்கும் இரு எட்டுக்களில் ஒன்று ஒரு தீமையை அழிக்கின்றது, மற்றொன்று ஓர் அந்தஸ்தை உயர்த்துகின்றது என நபி (ஸல்) கூறினார்கள். அறிவிப்பவர்: அபூஹுரைரா(ரலி), முஸ்லிம்(666)

عَنْ أَبِي هُرَيْرَةَ أَنَّ رَسُولَ اللهِ ﷺ قَالَ: أَلَا أَدُلُّكُمْ عَلَى مَا يَمْحُو اللهُ بِهِ الْخَطَايَا وَيَرْفَعُ بِهِ الدَّرَجَاتِ قَالُوا بَلَى يَا رَسُولَ اللهِ قَالَ إِسْبَاغُ الْوُضُوءِ عَلَى الْمَكَارِهِ وَكَثْرَةُ الْخُطَا إِلَى الْمَسَاجِدِ وَانْتِظَارُ الصَّلَاةِ بَعْدَ الصَّلَاةِ فَذَلِكُمْ الرِّبَاطُ (م/ ٢٥١)

'எந்தக் காரியங்கள் மூலம் அல்லாஹ் பாவங்களை அழித்து பதவிகளை உயர்த்துவானோ அவற்றை நான் உங்களுக்கு அறிவிக்கட்டுமா?' என நபி(ஸல்) அவர்கள் கேட்டார்கள். அதற்குத் தோழர்கள் ஷஅல்லாஹ்வின் தூதரே! அறிவியுங்கள் என்றனர். உடனே நபி(ஸல்)அவர்கள், 'சிரமமான நேரங்களிலும் உளுவைப் பூரணமாகச் செய்வது, பள்ளிவாசல்களுக்கு அதிகம் நடந்து செல்வது, ஒரு தொழுகைக்குப் பிறகு மறு தொழுகையை எதிர்பார்ப்பது. இதுதான் எல்லையைப் பாதுகாப்பது, இது தான் எல்லையைப் பாதுகாப்பது' என்று கூறினார்கள். அறிவிப்பவர்: அபூஹுரைரா(ரலி), நூல்: முஸ்லிம்(251)

عَنْ أَبِي هُرَيْرَةَ عَنْ النَّبِيِّ ﷺ قَالَ: مَنْ غَدَا إِلَى الْمَسْجِدِ وَرَاحَ أَعَدَّ اللهُ لَهُ نُزُلَهُ مِنْ الْجَنَّةِ كُلَّمَا غَدَا أَوْ رَاحَ (خ/ ٦٦٢، م/ ٦٦٩)

பள்ளிவாசலுக்கு ஒருவர் காலையிலோ மாலையிலோ சென்றால், அப்படி அவர் காலையிலும் மாலையிலும் செல்லும்போதெல்லாம் சொர்க்கத்தில் ஓர் உபசரிப்பை அல்லாஹ் அவருக்காக தயார் செய்கிறான் என நபி(ஸல்) கூறினார்கள். அறிவிப்பவர்: அபூஹுரைரா(ரலி), நூல்: புகாரி(662), முஸ்லிம்(669)